தினமலர்

**கடும் சோதனையிலும் காசு பார்த்த கிருஷ்ணகிரி மா விவசாயி**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,00:00 IST



கிருஷ்ணகிரி மாவட்டத்தை "**மா மாவட்டம்**' என்று சொல்வார்கள். இந்த வருடம் மா மகசூல் பொதுவாக திருப்தியாகத்தான் இருந்தது. இருப்பினும் விவசாயிகளுக்கு கணிசமான மகசூலினையும் லாபத்தினையும் கொடுத்துவந்த ஆல்போன்சா மிகவும் குறைந்த மகசூலினையே கொடுத்தது. இதற்கு காரணம் பனி, மழை போன்ற சூழ்நிலையே. இதனால் உற்பத்தி யில் பாதிப்பு ஏற்பட்டு நல்ல விலையே கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் கிருஷ்ணகிரியைப் பற்றி பேசும்போது அங்கு என்னவாகியிருக்கும் என ஆராயலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா மகசூல் நன்றாக இருந்தது. ஆனால் இங்கும் மழையின் பாதிப்பு கடுமையாக இருந்தது. கடும் காற்று மற்றும் ஆலங்கட்டி மழை. விவசாயிகள் முதலில் சோகத்தில் இருந்தனர். இருப்பினும் நாட்கள் தள்ளிவரும்போது நிலைமை சீர்பட்டு வருவாய் கிட்டியது. இந்த சூழ்நிலையை ஆராயலாம். கிருஷ்ண கிரியில் தோத்தாபுரி ஓரளவிற்கு நல்ல மகசூலினைக் கொடுத்தது. விவசாயிகளுக்கு தோத்தாபுரி அதன் "பழக்கூழ்' பெருமையால் நல்லது

ஏற்படவில்லை. தோத்தாபுரி பழங்களுக்கு குறிப்பிட்ட எடையும் கலரும், ருசியும் இருக்கும். பிரபல விவசாயி சாந்தகுமார் இந்த ரகத்தை டன்னிற்கு ரூ.6 ஆயிரத்திலிருந்து 7 ஆயிரம் வரை விற்றார். சாந்தகுமார் தான் விளைவித்த ஆல்போன்சா பழங்களை அட்டைப்பெட்டியில் பேக் செய்து ஒரு டன் பழத்தை ரூ.30,000 வரை விற்றிருக்கிறார்.

கிருஷ்ணகிரியில் கலர் பழம் செந்தூராவிற்கு நல்ல மதிப்பு உள்ளது. இந்த ரகத்தின் மிக சிறப்பான குணம் யாதெனில் தமிழகத்தில் முதன்முதலாக அறுவடைக்கு வரும் பழம். இந்தப் பழத்தை கையில் வைத்து பல முறை அழுத்தினால் பழம் ஓர் நீர் பந்துபோல் ஆகிவிடும். உடனே அடி பாகத்தில் துளைசெய்து வாயில் வைத்து உறிஞ்சினால் ஜுஸ் அனைத்தையும் குடித்துவிடலாம். அடுத்து கிருஷ்ணகிரி பகுதியில் பீத்தர் அல்லது நடுசாலை என்ற மா ரகமும் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் பழம் நல்ல நறுமணமும் ருசியும் கொண்டுள்ளது. இவைகளும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு டன்னிற்கு ரூ.7000 வரை விலை பெற்றுத் தருகின்றது. கிருஷ்ணகிரியில் சிறந்த "**டேபிள் வெரைட்டி**' பங்கனபள்ளியாகும். இந்த வருடம் இந்த ரகம் விவசாயி களுக்கு உதவி உள்ளது. இந்த பழங்களை வெளிமாநிலங்களுக்கு விற்கும்போது அவைகளுக்கு டன்னிற்கு விலை ரூ.10,000 வரை கிடைத்துள்ளது.


கிருஷ்ணகிரி பகுதியில் சுவையும் மணமும் மிக்க காலப்பாடு ரகம் சாகுபடி செய்யப் படுகின்றது. இந்த ரகம் பங்கனபள்ளிக்கு ஒப்பான சுவையைப் பெற்றுள்ளது. இந்த பழங்கள் ஒரு வீட்டில் இருந்தால் வீட்டில் நுழைபவர்களுக்கு வீட்டினுள் காலப்பாடு பழங்கள் இருக்கின்றன என்று தெரிந்துவிடும். பழங்கள் நடுத்தர சைசினைக் கொண்டது. ஒவ்வொரு பழமும் சுமார் 150 கிராம் எடையைக் கொண்டது. கொட்டை சிறியதாகவும், சதைப்பற்று அதிகமாகவும்?இருக்கும். பழங்களை தோலோடு சாப்பிடலாம். இந்த பழங்களை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு டன்னிற்கு விலை ரூ.12 ஆயிரம் வரை கிடைத்துள்ளது. கிருஷ்ணகிரி பகுதியில் விவசாயிகள் மல்கோவா பழங்களை வெளிமாநிலங்களுக்கு அனுப்பி விற்கின்றனர். இந்த வருடம் விவசாயிகளுக்கு டன் பழங்களுக்கு விலை ரூ.15 ஆயிரம் வரை கிடைத்துள்ளது.

கிருஷ்ணகிரி விவசாயிகள் பலர் பலவிதமான ஊறுகாய் ரகங்களை விற்பனை செய்கிறார்கள். இந்த ரகங்களை பொதுவாக ""நாட்டி" வெரைட்டி என்கிறார்கள். இவைகளை விற்று இந்த வருடம் டன்னிற்கு ரூ.4,000 - 7,000 விலை பெற்றிருக்கிறார்கள். சில விவசாயிகள் புகழின் உச்சியில் இருக்கும் இமாம்பசந்த் ரகத்தினை சாகுபடி செய்துள்ளனர். இப்பழங்களை டன்னிற்கு ரூ.20,000 வரை விற்பனை செய்துள்ளார்கள். இந்த வருடம் கடும் சோதனையிலும் கிருஷ்ணகிரி

விவசாயிகள் மா சாகுபடியில் ஓரளவு லாபம் எடுத்துள்ளனர் என்று பிரபல மா விவசாயி சாந்தகுமார் கூறுகிறார்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**முட்டைப்பழம் சாகுபடிநுட்பங்கள் -நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,00:00 IST





முட்டைப்பழம் மக்களிடையே அதிகம் பிரபலமடையாத ஒரு சிறுபான்மை வகை பழமாகும். இதன் தோற்றமும் சதைப்பற்றின் தன்மையும் வேகவைத்த முட்டையின் மஞ்சள் கருவை ஒத்திருப்பதால் இப்பழமானது "முட்டைப்பழம்' என்று அழைக்கப் படுகிறது. பவுட்டீரியா கம்பீசியானா என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட முட்டைப்பழம் சப்போட்டேசியே என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

எப்பொழுதும் பசுமையுடன் காணப்படும் முட்டைப்பழமரம் நேராக சுமார் 7 முதல் 8 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இதன் அடித்தண்டின் சுற்றளவு ஒரு மீட்டர் வரை காணப்படும். இளம் காய்கள் பச்சை வண்ணமுடனும், நன்கு முதிர்ந்த காய்கள் ஆரஞ்சு கலந்த மஞ்சள் வண்ணமுடனும் காணப்படும். பழத்தின் சதைப்பகுதி மிருதுவாகவும் ஆரஞ்சு நிறத்துடனும் நல்ல இனிப்பாகவும் காணப்படும். பழத்தின் நடுப்பகுதியில் ஒன்று முதல் நான்கு பழுப்பு நிற, நீள்வட்ட விதைகள் காணப்படும்.

வெப்பமண்டலம் மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் நன்கு செழித்து வளரும். மிதமான மழையளவும் உறைபனி இல்லாத வறண்ட தட்பவெப்ப நிலை கொண்ட வெப்ப மண்டலம், மிதவெப்ப மண்டலப் பகுதிகள் இதன் வளர்ச்சிக்கு மிக உகந்த சூழ்நிலையாகும். இம்மரம் பல்வேறு வகையான மண்வகைகளில் வளரும் பண்புடையபோதிலும், கரிமச்சத்து நிறைந்த வடிகால் வசதியுள்ள மண் வகைகளில் நன்கு செழித்து வளர்ந்து அதிக விளைச்சலைக் கொடுக்கும். உவர், உப்புத்தன்மையையும் ஓரளவு தாங்கிவளரும் பண்புடையதாகும்.

பயிர் பெருக்கம்: பொதுவாக விதைகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது. விதைகள் விரைவில் உயிர்த்தன்மையை இழந்துவிடுவதால் பழங்களில் இருந்து பிரித்தெடுக்கப் பட்டவுடன் நிழலில் சிறிதளவு உலர்த்தப்பட்டு பின் உடனடியாக மேட்டுப் பாத்திகளில் விதைக்கப்பட வேண்டும். விதைகள் முளைக்க 15 முதல் 25 நாட்கள் வரை ஆகும்.

முளைத்த நாற்றுகளில் 4-5 இலைகள் உருவானஉடன் அவற்றை எடுத்து பாலிதீன் பைகளில் நடவேண்டும். 6 மாதங்களில் நாற்றுகள் வயலில் நட தயாராகிவிடும். ஒட்டுக் கட்டுதல், மொட்டுக்கட்டுதல் முறைகளும் பரிந்துரை செய்யப் படுகிறது. நடவு வயலில் 6து6 மீட்டர் இடைவெளியில் 60து60து60 செ.மீ. அளவு குழிகள் எடுத்து, குழிகளில் 30 கிலோ தொழு உரம், 100 கிராம் வேப்பம் புண்ணாக்கு, 20 கிராம் சூடோமோனாஸ் சேர்த்த மண்க லவை கொண்டு நிரப்ப வேண்டும். ஒட்டுக்கன்றுகளை அதன் ஒட்டுப்பாகம் மண்ணிற்கு மேலே இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். மழைகாலம் தொடங்கும் போது நடவு செய்வது நல்லது. தனிப்பயிராக பயிரிடும்போது அதனுடன் ஊடுபயிராக இஞ்சி, ஆரோரூட் கிழங்கு, அன்னாசி போன்றவற்றை பயிரிடலாம்.

**கவாத்து செய்தல்**: நட்ட முதல் 2 வருடங்களுக்கு சிறிய அளவில் கவாத்து செய்து கிளை வளர்ச்சியை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

**அறுவடை**: இம்மரம் 5 ஆண்டுகளில் நன்கு காய்க்க ஆரம்பித்துவிடும். ஆண்டு முழுவதும் பூத்துக்காய்க்கும். நன்கு முதிர்ச்சி அடைந்து பழுக்கும் தருவாயில் உள்ள பழங்களையே அறுவடை செய்ய வேண்டும். மரம் ஒன்றுக்கு 400-600 பழங்கள் வரை அறுவடை செய்யலாம்.

நன்கு பழுத்த பழங்களை தோல் நீக்கியோ அல்லது தோலுடனோ விதைகளை நீக்கிவிட்டு?உண்ணலாம். சாறு இல்லாமல் மாவுச்சத்து நிறைந்து காணப்படுவ தால் இதன் சதைப்பகுதி மின் உலர்த்திகளில் உலர்த்தப் பட்டு பவுடராக்கப்படுகிறது. ஐஸ்கிரீம், பேக்கரிகளில் கேக், ரொட்டி தயாரிப்பில் பயன்படுகிறது. இம்மரத் தினை அனைவரும் வீட்டுத்தோட்டங்களில் வளர்த்து பயன்பெறலாம். இதன் நாற்றுக்கள் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறையில் விற்பனைக்கு உள்ளன. (தகவல்: தி.தங்கச்செல்வபாய், த. செல்வகுமார், க.இறைவன், வேளாண்மை அறிவியல் நிலையம், பேச்சிப்பாறை-629 161. 94420 06831)**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**அகர்உட் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,00:00 IST



**அகர் ஒரு மதிப்பு வாய்ந்த சொத்து**: அகர் ஒரு வியாபார ரீதியிலான பணப்பயிர். இதன் பிறப்பிடம் இந்தியா என்றாலும் இப்பயிர் மலேசியா, தாய்லாந்து, தென்கொரியா, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, லாவோஸ், வியட்நாம், கம்போடியா, மியான்மர் மற்றும் பல நாடுகளில் பயிரிடப்படுகிறது.

**பயிரிட தகுதி வாய்ந்த அமைப்பு**: அகர்மரம் மேற்பகுதி விவசாயிகளின் தங்கப் பயிர். அகர் ஒரு பாதுகாப்பான சிறிய மரம். இப்பயிரை மேற்ப குதி மண்டலத்தில் எந்தவிதமான முக்கியத்துவமும் கொடுக்காமல் முக்கிய பயிராக காப்பி, டீ, ஆர்கானட், கார்டமம், தென்னை மற்றும் பனை போன்றவற்றை பயிரிடுவதைப் போன்று மலையடிவாரங்களிலும் மேட்டுபாங்கான இடங்களிலும் பயிரிடலாம்.

**காப்பித் தோட்டங்கள் ஒரு சிறந்த இடம்:** அகர்வுட் பயிர்களை காப்பித் தோட்டங்களில் ஆரஞ்ச், சில்வர் ஓக் மற்றும் இதர நிழல் தரும் மரங்களின் ஊடே பயிரிடலாம். இப்பயிரின் இலை அமைப்பானது இயற்கையில் எளிதில் மக்கக்கூடியது. இயற்கை எருவாக பயன்படக்கூடியது. வேர் ஆழமாக பூமியில் ஊடுருவாத தன்மை கொண்டதுடன் இது ஊர்ஜிதப்படுத்துகிறது. பத்தின் இரு மடங்கு விளைச்சலை குறுகிய காலத்தில் கொடுக்கிறது.

**குறைந்த முதலீடு அதிக லாபம்:** அகர்வுட் பயிர் நிரந்தரமான அதிக வருவாயினை பயிரிடப்பட்ட 7வது வருடத்திலிருந்து தருகிறது. எதிர்பார்த்த வருவாய் ஒரு கிலோவிற்கு ரூ.10,000 என்றாலும் ஒரு மரத்திற்கு 50 கிலோ எடை வந்தால் ரூபாய் ஐந்து லட்சம் கிடைக்கும். வருவாய் தற்போதைய

சந்தை மதிப்பினை விட குறைவு.

**சந்தன மரத்தைவிட சிறந்த அகர்வுட்**: முதல் தரமான அகர்வுட்டின் விலை ஒரு கிலோவிற்கு ரூ.30,000 மற்றும் அதன் எண்ணெயின் விலை சில்லரை சந்தையில் ஒரு கிலோவிற்கு ரூ.10 லட்சம், தேசிய அளவிலும் அகில?உலக அளவிலும் அகர்வுட் ஒரு நிலையான தேவையையும் பெரிய வியாபார மதிப்பையும் கொண்டுள்ளது.

**பராமரிப்பு வேண்டாம், தொழிலாளர் கண்காணிப்பு வேண்டாம்**: அகர் பயிரிடுவதற்கு பயிரிடும் விவசாயியை தவிர வேறு தொழிலாளர்கள் கண்காணிப்பு வேண்டாம். ஒருமுறை பயிரிட்டஉடன் அதனை அறுவடை செய்யும் வரை இதற்கு குறிப்பிடத்தக்க சிறப்பு கவனம் ஏதும் செலுத்த வேண்டாம். **தொடர்புக்கு**: கனகராஜ், செய்யூர்.போன்: 04183-320 193, மொபைல்: 77083 98535, 95855 60318.

-கே.சத்தியபிரபா, உடுமலை.

**மானிய விலையில் ராகி விதை விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,02:25 IST

ஓசூர்: "ஓசூர் தாலுகாவில், 50 சதவீதம் மானிய விலையில் ராகி விதை விற்பனை செய்யப்படுகிறது' என, ஓசூர் வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் தாலுகாவில், கடந்த சில வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதானல், விவசாயிகள் மானவாரி நிலங்களை உழுது தயார் செய்து ராகி விதைப்பு செய்ய உள்ளனர். விவசாயிகள் ஹெச்.ஆர்.,911, இன்டாப் 5, 9, ஜிபியூ 28, எல்.5 மற்றும் உள்ளூர் ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். ஜிபியூ 28 மற்றும் எல்.5 ரகங்கள் 120 நாட்கள் வயதுடையவை. மண் வளத்தை பொறுத்து மூன்று அடி உயரம் வரை வளர கூடியவை. வறட்சி தாங்கி வளரும். குலை நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட ரகம். இதிலிருந்து பெறப்படும் வைக்கோல், கால்நடைகளுக்கு மிக சிறந்த தீவனமாக பயன்படுகிறது.

வேளாண் துறையினரால் பரிந்துரை செய்யயப்படும் தொழில் நுட்பங்களான பூஞ்சான் விதை நேர்த்தி, உயிர் உர விதை நேர்த்தி நுண்ணூட்ட சத்து இடுதல், மண் பரிசோதனைப்படி அடியுரம் மற்றும் மேல் உரம் இடுதல், காலத்தே பயிர் பாதுகாப்பு செய்தல் ஆகியவற்றை பொறுத்து, ஒரு ஏக்கருக்கு, 1,500 கிலோ வரை மகசூல் கிடைக்கும். தேவையான தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. ஜிபியூ 28 மற்றும் எல்.5 ரகங்கள் விதைப்பண்ணை அமைத்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விதைச்சான்று துறையினர் மூலம் சான்று அட்டை பொறுத்தி விநியோகத்துக்கு தயாராக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதை கிராம திட்டத்தின் கீழ்,

50 சதவீதம் மானிய விலையில் விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இந்த ராகி விதைகளை பெற்று பயனடையலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு பூண்டு உற்பத்தி இல்லை**

ஜூன் 15,2011,01:32



சர்வதேச அளவில், பூண்டுக்கான தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், இதனை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லை. மேலும், உலகளவில், இதன் சாகுபடி பரப்பளவு குறைந்து வருவதுடன், பதப்படுத்தி சேமித்து வைப்பதற்கான கிடங்கு வசதிகளும், இல்லை என கூறப்படுகிறது.

தற்போதைய நிலையில், உலகளவில்,12.25 லட்சம் எக்டேரில், 1.58 கோடி டன் பூண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு எக்டேருக்கு சராசரியாக, 12.80 டன் பூண்டு உற்பத்தியாகிறது.

சர்வதேச அளவில், பூண்டு உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. இந்நாட்டில், 1.21 கோடி டன் பூண்டு உற்பத்தியாகிறது. இந்நாட்டின் பங்களிப்பு 77.07 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இதனை தொடர்ந்து, இந்தியாவில் 8.3 லட்சம் டன் பூண்டு உற்பத்தியாகிறது. நம் நாட்டின் சந்தை பங்களிப்பு 5.29 சதவீதமாக உள்ளது. தென்கொரியாவின் பங்களிப்பு 2.08 சதவீதமாகவும், ரஷ்யாவின் பங்களிப்பு 3.98 சதவீதமாகவும் உள்ளது.மேற்கண்ட நாடுகள் தவிர, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளிலும், பூண்டு உற்பத்தி கணிசமான அளவிற்கு உள்ளது. பூண்டு சாகுபடிக்கு, மிதமான தட்ப வெப்ப நிலை தேவைப்படுகிறது.

கடந்த 2009-10ம் நிதியாண்டில், இந்தியாவின், பூண்டு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 10 ஆயிரத்து 750 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு, 30.42 கோடி ரூபாயாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா அதிக அளவில் பூண்டு இறக்குமதியை மேற்கொண்டு வந்தது. இந்த நிலை மாறி தற்போது, இந்தியா உள்நாட்டு தேவையை ஈடு செய்து, அதேசமயம், ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உயர்ந்துள்ளது.நம் நாட்டிலிருந்து, அமெரிக்கா அதிகளவில் பூண்டை இறக்குமதி செய்து கொள்கிறது. நாட்டின் மொத்த

பூண்டு ஏற்றுமதியில், 31சதவீத அளவிற்கு அமெரிக்கா இறக்குமதி செய்து கொள்கிறது. இதனை தொடர்ந்து, பாகிஸ்தான் நாட்டிற்கு, 22.72 சதவீத அளவிற்கு ஏற்றுமதியாகிறது.

மேலும், வங்க தேசம், மலேசியா, சிங்கப்பூர், நேபாளம், பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவிற்கு பூண்டு ஏற்றுமதியாகிறது.உலகளவில், பூண்டு உற்பத்தியில், சீனா முதலிடத்தில் உள்ளது என்றாலும், இந்தியாவின் பாரம்பரியமிக்க தரமான பூண்டிற்கு, சர்வதேச அளவில், அதிக வரவேற்பு காணப்படுகிறது.உள்நாட்டில், பூண்டு உற்பத்தியில் குஜராத் முதலிடத்தில் உள்ளது.

மத்திய பிரதேசம், குஜராத், ஒடிசா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம், மகாராஷ்ட்ரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், இதன் உற்பத்தி மிகவும் அதிகமாக உள்ளது. கர்நாடகா, பீகார், தமிழ்நாடு, அரியானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும், குறிப்பிடத்தக்க அளவிற்கு பூண்டு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

மருத்துவ குணம் கொண்ட பூண்டு, இந்தியாவில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளில், ஊறுகாய், கறி மசாலா, சட்னி, சாஸ் மற்றும் கெட்சப்ஸ் போன்றவற்றில் மிக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. மேலும், ஆயுர்வேத மருந்துப் பொருள்கள் தயாரிப்பிலும், பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.பூண்டிற்கான தேவை உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும், அதிகரித்து வருகிறது.

எனவே மத்திய, மாநில அரசுகள் பூண்டு சாகுபடிக்கு, அதிக முக்கியத்துவம் அளிப்பதுடன், சேமிப்பு கிடங்கு வசதிகளையும், விவசாயிகளுக்கு ஏற்படுத்தி தர வேண்டும். பூண்டு சாகுபடிக்கான பரப்பளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அதிக மகசூல் தரக்கூடிய வகையிலான, பூண்டு விதைகளை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களின் வாயிலாக உருவாக்க வேண்டும் என, வேளாண் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.- நமது சிறப்பு நிருபர் -

**தென்னையை தாக்கும் கருத்தலை புழு வேளாண் துறை விழிப்புணர்வு பிரச்சாரம்**
பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,02:25 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் தென்னை மரங்களை கருந்தலை புழுக்கள் அதிகளவில் தாக்கி வருகிறது. இந்த நோயை கட்டுப்படுத்த, வேளாண் அலுவலர்கள் கிராமங்களில் முகாமிட்டு துண்டு பிரசுரங்கள் விநியோகித்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று பாசனப்பகுதிகளிலும், படுகைகளிலும் அதிகளவு தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஓசூர், பாகலூர், தொரப்பள்ளி, ஒன்னல்வாடி, சூளகிரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை

மரங்கள் அதிகளவில் உள்ளன. தற்போது, தென்னை மரங்களில் அதிகளவு கருந்தலை புழு தாக்குதல் காணப்படுகிறது. இந்த தாக்குதலால் தேங்காய் மகசூல் பாதிக்கப்படுவதோடு, அறுவடை செய்யப்படும் தேங்காய்கள் தரமற்றவையாக உள்ளது. ஓசூர் தாலுகாவில் காரப்பள்ளி, கொல்லப்பள்ளி, தொரப்பள்ளி, குடிசாகனப்பள்ளி, ஒன்னல்வாடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்களில் கருந்தலை புழு தாக்குதல் தென்படுகிறது. இந்த புழுக்கள் தென்னை மரத்தை முற்றிலும் தாக்கி சேதப்படுத்துகிறது. இதனால், தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இது குறித்து ஓசூர் வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: ஜனவரி முதல் மே மாதம் வரை தென்னை மரங்களில் கருந்தலைப்புழு தாக்குதல் தென்படுகிறது. நோய் தாக்கப்பட்ட தென்னையில், புழுக்கள் இலை திசுக்களில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிடுகிறது. பெண் பூச்சிகள் மங்கலான வெண்ணிறம் கொண்ட முட்டைகளை இலைகளின் அடிப்பாகத்தில் அல்லது பழைய புழுக்கூடுகளின் அருகே இடும். இந்த முட்டையில் இருந்து ஐந்து நாட்களில் வெளியேறும் கருந்தலை புழு, மற்ற தென்னை மரங்களுக்கு பரவாமல் தடுக்க தாக்கப்பட்ட ஓலைகளை எரித்து விட வேண்டும். ஒட்டுண்ணிகளான பேராசியரோலா, நேப்பாண்டிஸ் அல்லது பிரகான்பிரேவிகார்னிஸ் ஆகியவற்றை மரத்தில் விட்டால் தென்னையில் புழுதாக்குதலை கட்டுப்படுத்தலாம். வளர்ந்த மரங்களில் கருந்தலை புழுதாக்குதலை கட்டுப்படுத்த, குளோராவாஸ் 2 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து, தாக்குதல் அதிகமுள்ள மரங்களில் இலைகளின் அடிப்பாகத்தில் நனையும்படி தெளிக்க வேண்டும்.

காய்ப்புக்கு வந்த மரங்களில் தாக்குதலை கட்டுப்படுத்த, மரத்தின் அடிப்பாகத்தில் இருந்து ஒன்றரை மீட்டர் உயரத்தில், மரத்தின் தண்டு பாகத்தில் சாய்வாக துளையிட்டு அதனுள் மோனாகுரோட்டாபாஸ் 5 மில்லி, தண்ணீர் 5 மில்லி கலந்து ஊற்றி களி மண்ணால் முடிவிட வேண்டும். வேர் மூலம் கட்டுப்படுத்துவதாக இருந்தால், நன்கு வளர்ந்த வேரினை சாய்வாக வெட்டிய பின் பாலிதீன் பையில் மோனோகுரோட்டாபாஸ் 10 மில்லி மற்றும் 10 மில்லி தண்ணீர் கலந்த கலைவையில் வேரினை இட்டு இருக்கமாக கட்டிவிட வேண்டும். இந்த முறையை அதிகமாக தாக்குதல் உள்ள போது மட்டும் கடைபிடிப்பது அவசியம்.

மருந்திட்ட, 40 நாட்கள் வரை காய் பறிப்பதை தவிர்க்க வேண்டும். இதற்கு மரம் ஒன்றிற்கு ஆறு ரூபாய் வரை செலவாகும். கிராமங்களில் முகாம்கள் மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் விழிப்புணர்வு செய்யப்படுகிறது. விவசாயிகள் பயன்பெறும் விதமாக கருந்தலை புழு தடுப்பு முறைகள் குறித்து தமிழ் மற்றும் தெலுங்கு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**ஆனைமலையில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,00:36 IST

ஆனைமலை:ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 63.50 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 50 பேர் 87 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை மூன்று வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வன் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 42 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 60.70 ரூபாய் முதல் அதிகபட்சமாக 63.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 45 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 52.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 58.55 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**விவசாயத்தை நம்பினால் தோற்பதற்கு வாய்ப்பில்லை**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,01:21 IST

மதுரை : ""விவசாயத்தை முழுமையாக நம்பிய எந்த நாடும், முன்னேற்றப் பாதையில் தோற்றுப் போவதில்லை,'' என, மதுரை விவசாய மருத்துவ மைய பயிற்சி விழாவில் தெரிவிக்கப்பட்டது. மதுரை வாப்ஸ் நிறுவனம் சார்பில் நடந்த பயிற்சி முகாம் நிறைவு விழாவில், தொழில்நுட்ப ஆலோசகர் சுப்ரமணியன் வரவேற்றார். பவர் கிரிட் கார்ப்பரேஷன் துணைப் பொதுமேலாளர் ஜவஹர் தலைமை வகித்தார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆரோக்யசாமி பேசியதாவது: விவசாயத்தை தொழிலாக பார்க்கும் மனப்பான்மை நம்மிடம் இல்லை. விவசாயத்தை தொழிலாக கொண்ட இஸ்ரேல் நாடு, அரபு நாடுகளுக்கு சவாலாக விளங்குகிறது. அந்தளவுக்கு தொழில்நுட்ப நேர்த்தி பின்பற்றப்படுகிறது. மிகப்பெரிய நிறுவனங்கள் கூட, வருமானத்தின் பெரும்பகுதியை விளைநிலங்களாக வாங்கி விவசாயத்தை மேம்படுத்துகின்றன. வருமானம் தரும் தொழில் என்பதாலேயே அப்படிச் செல்கின்றனர். இது தெரியாமல் விவசாயிகள் விவசாயத்திலிருந்து மெல்ல விலகிச் செல்கின்றனர். விவசாயத்தில் உற்பத்தி என்ற நிலையோடு நின்றுவிடாமல், விளைந்தவற்றை மதிப்பு கூட்டிய பொருட்களாக மாற்றினால் நஷ்டத்திற்கு இடமில்லை. விவசாயிகளின் தலைமுறைகள் இதை, சிறந்த தொழிலாக மாற்றலாம். ஆரோக்கியத்தை பாதுகாக்கும் உணவுக்கு, என்றுமே வரவேற்பு இருக்கிறது. கீழாநெல்லி, நெல்லிக்காய் தான் ஆயுர்வேதத்தில் அதிகம் பயன்படுகிறது. எனவே இவற்றை பயிரிடலாம். விவசாயிகள் இடைத்தரகர்களை நம்பியிருப்பதால், லாபத்தில் ஒரு சதவீதத்தை மட்டுமே

பெறுகின்றனர். மீதி லாபம் அனைத்தும் இடைத்தரகர், வியாபாரிகளை சேர்கிறது. இதை உணரவேண்டும். விவசாயத்தை முழுமையாக நம்பிய எந்த நாடும், முன்னேற்றப் பாதையில் தோற்றுப் போவதில்லை, என்றார். ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் நன்றி கூறினார்.---

**வேளாண் இணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,01:52 IST

கடலூர் : வரக்கால்பட்டு கிராமத்தில் எண்ணெய்ப்பனை அறுவடையை வேளாண் இணை இயக்குனர் ஆய்வு செய்தார். வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: பாமாயில் உற்பத்தியை பெருக்கிடும் பொருட்டு எண்ணெய்ப்பனை சாகுபடியை ஊக்குவித்திட மத்திய, மாநில அரசுகள் "எண்ணெய்ப்பனை அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் எண்ணெய்ப்பனை மரக்கன்றுகள் இலவசமாக வழங்குவதுடன் முதலாம் ஆண்டு நடவு மானியமாக ஒரு எக்டருக்கு 4,140 ரூபாயும், இரண்டாம் ஆண்டு முதல் நான்காம் ஆண்டு வரை பராமிப்புக்காக 50 சதவீத மானியத்தில் இடுபொருள் வழங்கப்படுகிறது. மூன்றாம் ஆண்டு முதல் எண்ணெய்ப்பனை பழக்குலைகள் அறுவடைக்கு வரும் 15 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்து வருமானம் பெற முடியும். இன்றைய நிலவரப்படி எண்ணெய்ப்பனைக்குலை ஒரு டன் 6,200 ரூபாயிக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கடலூர் வட்டாரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 200 ஏக்கரில் எண்ணெய்ப்பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வரக்கால்பட்டு கிராமத்தில் சுப்ரமணியன் என்பவரின் நிலத்தில் சாகுபடி செய்துள்ள எண்ணெய்ப்பனை அறுவடையை இணை இயக்குனர் இளங்கோவன் ஆய்வு செய்தனர்.

**பாசிப் பயறு, உளுந்து விற்பனை செய்ய வேளாண் பல்கலைக் கழகம் பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,02:15 IST

விழுப்புரம் : விவசாயிகள் தங்களிடமுள்ள பாசிப் பயறு, உளுந்தை உடன் விற்று பயனடையலாம். இது குறித்து விழுப்புரம் வேளாண் வணிக துணை இயக்குனர் சண்முகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் கடந்த 2009-10ம் ஆண்டில் 13.37 லட்சம் ஏக்கரில் பயறு வகைகள் சாகுபடி செய்தனர். கடந்தாண்டு 2.04 லட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தி செய்தனர். இதில் உளுந்து 6.5 லட்சம் ஏக்கரில், 3.45 லட்சம் ஏக்கரில் பாசி பயறும் சாகுபடி செய்ததில் 99,000 டன் உளுந்தும், 48,000 டன் பாசி பயறும் உற்பத்தியானது. கடந்தாண்டில் மொத்த பயறு வகைகள் சாகுபடி பரப்பில் 74.39 சதவீத நிலத்தில் உளுந்து, பாசிப் பருப்பு மட்டும் பயிர் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு கிலோ உளுந்து 56 ரூபாய்க்கும், பாசிப் பயறு 62 ரூபாய்க்கும் விற்றது. தற்போது உற் பத்தி அதிகரித்து உளுந்து 48 ரூபாய்க்கும், பாசிப் பயறு 38 ரூபாய்க்கும் விற்கின்றன.

வரும் 2011-12ம் ஆண்டு பட்ஜெட்டில் மத்திய அரசு பயறு வகைகள், எண்ணெய் பனை, காய்கறி பரப் பளவை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. கடந்த 2010ம் ஆண்டில் காரிப் பருவத்திலிருந்தே பயறு வகைகள் விரிவு படுத்தும் திட்டத்தில் பல தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது. கடந்தாண்டு பெய்த கூடுதல் மழையாலும் விவசாயிகள் அதிகளவு மகசூல் பெற்றனர். இந்தாண்டு ஜூன், ஜூலை மாதங்களில் உளுந்து மற்றும் பாசிப் பயறு விலையேற வாய்ப்பு இல்லை. உளுந்து மற்றும் பாசிப் பயறுகளை விற்க சரியான நேரம். இவ்வாறு செய்திக் குறிப்பில் வேளாண் வணிக துணை இயக்குனர் சண்முகம் கூறியுள்ளார்.

**தோட்டங்களாகும் மாடிகள்: வேளாண் பல்கலை திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,23:02 IST

நகர்புறங்களில் வசிப்பவர்கள், தங்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள குறைந்த அளவு இடத்தை பயன்படுத்தி காய்கறிகளை பயிர் செய்யும் வகையில், புதிய திட்டங்களை வேளாண்மை பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. வீட்டு காய்கறித் தோட்டம், மாடியில் தோட்டம் அமைத்தல், மலர் அலங்காரம், வீட்டினுள் அலங்கார செடி வளர்ப்பும் பராமரிப்பும், போன்சாய் செடி வளர்ப்பு, மூலிகை பயிர் சாகுபடி, காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அண்ணாநகரில் உள்ள தோட்டக்கலை வளர்ச்சி மையத்தில் அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் பங்கு பெறுபவர்களுக்கு குளிர்சாதன அறையில், மதிய உணவுடன் செய்முறை பயிற்சி, பயிற்சி ஏடு, குறிப்பு ஏடு ஆகியவை வழங்கப்படுகின்றன. திட்டம் குறித்து, வேளாண் பல்கலை அதிகாரி ஒருவர் கூறியதாவது: சென்னை நகர வீடுகளில் உள்ள காலியிடங்களில், மாடிகளில், காய்கறி தோட்டம் வைக்கும் வகையில் சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். பொதுமக்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தாலும், மாடித் தோட்டம் அமைக்கும் பயிற்சி, முன் மாதிரி பயிற்சியாக விளங்குகிறது. எங்கள் அலுவலகத்திலும், மாடித் தோட்டம் அமைத்திருக்கிறோம். எங்களிடம் பயிற்சி பெற்ற பலர் தங்கள் வீடுகளிலும், வணிக வளாகங்களிலும் மாடித் தோட்டங்கள் அமைத்து பயன் பெற்று இருக்கின்றனர். மாடி தோட்டம் அமைக்க பயிற்சி பெற விரும்புவோர், அலுவலக வேலை நாட்களில், 26263484, 42170506 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார். மாடித்தோட்டம் பயிற்சி குறித்து, சென்னை அண்ணாநகரைச் சேர்ந்த செல்லப்பன் கூறும்போது, "மாடித் தோட்டம் அமைக்கும் பயிற்சி, எங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது. பயிற்சியில், தோட்டம் அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்தது முதல், அதற்கான கொள்கலன்களை வடிவமைப்பது, தேவையான உபகரணங்கள், இதர தேவைகள், செடிகள் தேர்வு, நீர் விடும் முறை, உரம் இடும் முறை, பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாத்தல், உரம் தயாரிப்பு என பல்வேறு பயிற்சிகளை அளிக்கின்றனர்' என்றார். சென்னையில் வசிப்பவர்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட கிராமங்களில் இருந்து வந்து சென்னையில் குடியேறியவர்கள்.

நகர்புற மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, கோவை வேளாண் பல்கலைக்கழகம், 2000ம் ஆண்டு மே மாதம், சென்னை அண்ணாநகர் ஆறாவது அவென்யூவில், "நகர்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையத்தை' துவக்கியது. இங்கு மாதம் தோறும் குறைந்த கட்டணத்தில் பயன்தரும் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**தயார் நிலையில் உயிர் உரங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,21:13 IST

வடமதுரை : உயிர் உரங்களை வேளா ண்மை மையங்களில் வாங்கி பயன் பெறுமாறு, வடமதுரை வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்தார். அவர் கூறியது: செடிகள் நன்கு வளர வேர்களின் பங்கு முக்கியம். அதிகளவு வேர்களையும், நீளமான சல்லி வேர்களை கொண்ட செடி தான் நல்ல பலனை தரும். வேர் முடிச்சுகள் உணவினை சேகரித்து பாதுகாத்து செடிக்கு தருகிறது. வேர்களுக்கு அதிக நன்மை தருவது அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ் போ பாக்டீரியா உயிர் உரங்களாகும். இயற்கை விவசாயத்தில் இவ்வகை உயிர் உரங்கள் பெரிதும் நன்மை தரும். இத்தகைய உயிர் உரங்கள் தற்சமயம் வடமதுரை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் உரிய பருவத்தில் நெல் விதைகளும் இருப்பு உள்ளது. மானியத்தில் நெல் விதைகளை பெற்று விவசாயிகள் பயனடையவேண்டும், என்றார்.

**கார் சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,23:59 IST

விக்கிரமசிங்கபுரம் : நெல்லை மாவட்டத்தில் கார் சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணை நேற்று திறக்கப்பட்டடு 800 கனகுடிநீர் வெளியேற்றப்பட்டது. அணையை கலெக்டர் நடராஜன்

திறந்து வைத்தார். கார்சாகுபடி பாசனத்திற்காக ஆண்டுதோறும் பாபநாசம் அணை ஜூன் மாதம் 1ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டில் போதிய மழையில்லாத காரணத்தால் அணை திறக்கப்படுவது சற்று தாமதமானது. இந்நிலையில் கடந்த பல நாட்களாக பெய்து வரும் தென்மேற்கு பருவமழையின் காரணமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 57.75 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 575.56 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணைப்பகுதியில் 3 மி.மீ. மழையும், கீழணையில் 2 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. சேர்வலார் அணை நீர்மட்டம் நேற்று 70.05 அடியாக இருந்தது.

அந்த அணைப்பகுதியில் 4 மி.மீ. அளவில் மழை பதிவாகியுள்ளது. பாபநாசம் அணையில் ஓரளவிற்கு போதுமான தண்ணீர் இருப்பதால் கார்சாகுபடிக்கு அணையிலிருந்து தண்ணீர் திறப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பாபநாசம் அணையிலிருந்து 800 கனஅடி தண்ணீரை கலெக்டர் நடராஜன் திறந்து வைத்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார். பாபநாம் அணையை திறந்து வைத்து நெல்லை கலெக்டர் நடராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:- தமிழக முதல்வர் ஆணையின்படி நெல்லை மாவட்டத்தில் அம்பை., தாலுகாவில் உள்ள பாபநாசம் அணை இன்று திறக்கப்பட்டு 800 கனஅடிநீர் வெளியேற்றப்பட்டது. வடக்கு கோடை மேலழகியான், தெற்கு கோடை மேலழகியான், நதியுன்னி மற்றும் கன்னடியன் ஆகிய நான்கு கால்வாய்களின் மூலம் பாசன வசதி கிடைக்கும்.

இதன் மூலம் 18 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும். அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் 120 நாட்களுக்கு தொடர்ந்து விடப்படும். நெல்லை மாவட்ட விவசாயிகளுக்கு இந்த நேரத்தில் அன்பான வேண்டுகோள் தண்ணீரை தேனைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இவ்வாறு கலெக்டர் நடராஜன் தெரிவித்தார். அணை திறப்பின் போது பாளை., தாமிரபரணி வடிநில வட்டம் கண்காணிப்பு பொறியாளர் பாஸ்கல்ராஜ், செயற்பொறியாளர் காமராஜ், அம்பை.,பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் ராமையா, பாபநாசம் கீழணை செயற்பொறியாளர் சந்தானக்குமார், உதவி செயற்பொறியாளர் சுடலையாண்டி, உதவி பொறியாளர் ராஜா, இளநிலை பொறியாளர் சீனிவாசன், நெல்லை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் தேவசகாயம், துணை இயக்குநர் அழகிரிசாமி, தாமிரபரணி திட்டக்குழு தலைவர் இதயசூரியன், அதிமுக அம்பை., ஒன்றிய செயலாளர் தாயப்பராஜா, அம்பை., தாசில்தார் சுப்பிரமணியன், அதிமுக இளைஞர் பாசறை ஒன்றிய செயலாளர் மாரிமுத்து, அம்பை., பஞ்., யூனியன் துணைதலைவர் சிவகுருநாதன், பிஆர்ஓ சவுந்தரபாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *தமிழ்நாடு மற்றும் கேரளாவில் தேங்காய் உற்பத்தி குறைந்தது தேங்காய் எண்ணெய் விலை உயரும்?*

*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*தமிழ்நாடு, கேரளாவில் தேங்காய் விளைச்சல் சரிவடைந்ததையடுத்து, நடப்பு பருவத்தில், நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இதனையடுத்து தேங்காய் எண்ணெய் விலை உயரும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.*

*ஆண்டு உற்பத்தி*

*நம் நாட்டில் ஆண்டுக்கு சுமார் 1,570 கோடி தேங்காய்கள் உற்பத்தி ஆகிறது. இதில் கேரளாவின் பங்களிப்பு 37 சதவீதமாகவும், தமிழகத்தின் பங்களிப்பு 34 சதவீதமாகவும் உள்ளது. நடப்பு பருவத்தில் கேரளாவில் தேங்காய் மகசூல் 20 முதல் 30 சதவீதம் வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தென்மேற்கு பருவமழைக்குப் பிறகு வரும் பருவத்தில் தேங்காய் விளைச்சல் அமோகமாக இருக்கும் என தெரிகிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தேங்காய் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தேங்காய் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றான இலங்கையில் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவில் தேங்காய்களை இறக்குமதி செய்து வருகின்றன. இதனையடுத்து புதிய மற்றும் உலர்ந்த தேங்காய்கள் ஏற்றுமதி சென்ற நிதி ஆண்டில் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.*

*தேங்காய் உற்பத்தியை பொறுத்தவரை இது மந்த பருவம் எனப்படுகிறது. இந்த நிலை ஆகஸ்டு மாதம் வரை நீடிக்கும். அம்மாதத்தில் ஓணம் பண்டிகை வருவதால் தேங்காய்க்கான தேவை பன்மடங்கு அதிகரிக்கும். அதன் பிறகு ரம்ஜான், தீபாவளி போன்ற பண்டிகைகள் வருவதால் நாடு முழுவதுமாக தேவை மேலும் உயரும் என்பதுடன் ஏற்றுமதிக்கான தேவையும் நீடிக்கும்.*

ஜனவரி மாதத்தில்...

நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ எண்ணெய் விலை ரூ.100–ஐ தாண்டியது. இதனால் பாட்டிலில் அடைத்து விற்கும் நிறுவனங்கள் விலையை உயர்த்தின. மே மாதத்தில் மொத்த விற்பனையில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை ரூ.104–ஐ எட்டியது. தற்போது விலை ரூ.95–100 என்ற அளவில் உள்ளது. இந்நிலையில் குறுகிய கால அடிப்படையில் தேங்காய் எண்ணெய் விலை குறைவதற்கான வாய்ப்பே இல்லை என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## எதிர்வரும் பருவத்தில் நெல் உற்பத்தி 10.2 கோடி டன்னாக உயர வாய்ப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பருவமழை நிலவரம் நன்றாக உள்ளதால் எதிர்வரும் 2011–12 வேளாண் பருவத்தில் (ஜுலை – ஜுன்) நாட்டின் நெல் உற்பத்தி 10.20 கோடி டன்னாக உயர வாய்ப்புள்ளது என மத்திய விவசாய துறை அமைச்சகத்தின் செயலாளர் பி.கே. பாசு தெரிவித்தார். நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை குறித்த காலத்தில் தொடங்கி விட்டது. கேரளாவில் மே 29–ந் தேதி மழை தொடங்கியது. வானிலை ஆய்வு மையத்தின் கணிப்புக்கு இரண்டு நாள் முன்னதாகவே மழை தொடங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கரீஃப் பருவத்திற்கான (ஜுன்–அக்டோபர்) விதைப்பு பணிகள் நாட்டின் பல பகுதிகளில் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன. மேலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு மானிய விலையில் உணவு தானியங்களை அளிக் கும் வகையில் உற்பத்தியைப் பெருக்கவும், நெல், கோதுமை கொள்முதலை அதிகரிக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை 16 சதவீதம் உயர்த்தி ரூ.1,080–ஆக அதிகரித்துள்ளது. இம்மாதத்துடன் நிறைவடையும் வேளாண் பருவத்தில் நெல் உற்பத்தி 9.40 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் பாய்ந்து வெளியேறுவதை படத்தில் காணலாம்.

ஆண்டிப்பட்டி, ஜூன்.15–

மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

வைகை அணை

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. 71 அடி உயர வைகை அணையின் மூலம் திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 45 ஆயிரத்து 41 ஏக்கர் நிலங்கள் இரு போக பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த ஆண்டு முதல் போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு இருந்தார்.

இந்த உத்தரவின் பேரில், வைகை அணையில் இருந்து திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களில் முதல் போக பாசன சாகுபடிக்காக நேற்று காலையில் தண்ணீர் திறக்கப்பட்டது.

அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சிக்கு தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமை தாங்கி, அணை மதகை திறந்து வைத்தார். பின்னர் பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீரில் மலர்தூவி வழிபாடு செய்தனர்.

அணையில் இருந்து வினாடிக்கு 900 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது.

அமைச்சர் தகவல்

வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது குறித்து தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ கூறியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட வந்துள்ளேன். மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 45 ஆயிரத்து 41 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் இன்றைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகள் பாசனத்திற்கு திறக்கப்பட்டுள்ள தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்து பயன் அடைய வேண்டும்.

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா, காவிரி டெல்டா பாசன விவசாயத்திற்காக ஜூன் மாதம் முதல் தேதியே தண்ணீரை திறந்து விட நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். அமைச்சர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாள்தோறும் எங்களுக்கு அவர் பல்வேறு ஆலோசனைகளை பாடம் போன்று எடுத்து கூறுகிறார். அவரின் வழிகாட்டுதலின் பேரில் இந்த ஆட்சியில் விவசாய வளம் கொழிக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை. இவ்வாறு அமைச்சர் செல்லூர் ராஜூ கூறினார்.

தினகரன்

## தொழிலாளர்கள் பற்றாக்குறை 100 நாள் வேலை திட்டத்தால் விவசாய உற்பத்தி பாதிப்பு

பதிவு செய்த நாள் 6/15/2011 12:42:36 AM



சண்டிகர் : மத்திய அரசின் 100 நாள் வேலை திட்டத்தால், தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். இதனால் பணவீக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தை (எம்என்ஆர்இஜி) மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி, பயனாளிகளுக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின்கீழ், கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.100 முதல் ஸி150 வரை வழங்கப்படுவதால் ஏழைகள் பயனடைந்து வருகின்றனர். எனினும், விவசாய வேலைக்கு வழங்கப்படுவதைவிட கூடுதலாக கிடைப்பதால் விவசாய தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் எச்சரிக்கின்றனர்.

ஆண்டுதோறும், பீகார் மாநிலத்திலிருந்து விவசாய வேலைக்கு தொழிலாளர்கள் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தொழிலாளர்கள் வேலைக்கு வருவது படிப்படியாக குறைந்து வருகிறது. 100 நாள் வேலை திட்டத்தில் கூடுதலாக அதுவும் சொந்த மாநிலத்திலேயே வேலை கிடைத்து விடுவதே இதற்குக் காரணம் என பஞ்சாப் மாநில விவசாயி குருதயால் சிங் மாலிக் தெரிவித்தார்.

## உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

பதிவு செய்த நாள் 6/15/2011 12:42:52 AM



மேட்டுப்பாளையம் : வட மாநிலங்களில் இருந்து உருளைக்கிழங்கு வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டுப்பாளையம் மொத்த மார்க்கெட்டில் ஊட்டி உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கு கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மொத்த மார்க்கெட் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கர்நாடகாவின் கோலார், உத்தரபிரதேசத்தின் ஆக்ரா, நைனிடால், மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் ஆகிய பகுதிகளில் இருந்தும் மேட்டுப்பாளையத்துக்கு உருளைக்கிழங்கு வருகிறது. அதுதவிர மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள குளிர்பதன கிடங்குகளில் இருந்தும் உருளைக்கிழங்கு வரத்து அதிகளவில் உள்ளது.

இவை அனைத்தும் இங்கு தரம் பிரித்து 45 கிலோ மூட்டைகளாக ஏலத்தில் விடப்படுகின்றன. இந்த உருளைக்கிழங்கு தமிழ்நாடு, கேரளா மட்டுமின்றி இலங்கை, மாலத்தீவு போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. ஊட்டி உருளைக்கிழங்கு 45 கிலோ மூட்டை ரூ.520 முதல் ரூ.750க்கு விற்பனையாகிறது. கோலார் கிழங்கு ரூ.480 முதல் ரூ.550 வரையும், ஆக்ரா கிழங்கு ரூ.420 முதல் ரூ.460 வரையும், கொல்கத்தா கிழங்கு ரூ.400 முதல் ரூ.410 வரையும் விற்கப்படுகிறது. வட மாநில உருளைக்கிழங்கை விட நீலகிரி உருளைக்கிழங்கு தரத்தில் சிறந்தது. எனவே அதற்கு எப்போதும் மவுசு அதிகம். கடந்த ஆண்டு இதோ காலக் கட்டத்தில் 45 கிலோ மூட்டை ரூ.750 முதல் ரூ.1000க்கும் அதிகமாக விலைபோனது. ஆனால் தற்போது இதன் விலை ரூ.520 முதல் ஸி750வரைதான் போகிறது.